செய்தி வெளியீட்டு எண்.105 நாள்: 13.11.2020

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்களின் தீபாவளித் திருநாள் வாழ்த்துச் செய்தி

தீபாவளித் திருநாளானது அவநம்பிக்கையை வெல்லும் நம்பிக்கையாகவும், தீமையை வெல்லும் நன்மையாகவும், இருளை வெல்லும் ஒளியாகவும் திகழ்கிறது. மகிழ்ச்சியான இத்தருணத்தில், தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவில் கொண்டாடப்படும் மிகச் சிறப்பான பண்டிகைகளில் தீபாவளித் திருநாளும் ஒன்றாகும். இத்திருநாள் நாடெங்கிலும் மட்டுமல்லாது, உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. நன்மையின் குன்றாத வலிமையையும், தீமையை வெல்லும் அதன் வல்லமையையும் கொண்டாடும் விழாவாக “தீபஒளித் திருவிழா”வான தீபாவளித் திருநாள் திகழ்கிறது. வாய்மையும் அறமுமே இறுதியில் வெல்லும் என்பதை இத்திருநாள் எடுத்து இயம்புகிறது. இருளிலிருந்து ஒளியை நோக்கிச் செல்லவும், அறியாமையிலிருந்து மேலான அறிவை எய்தவும், மனச்சோர்விலிருந்து பேரின்பத்தை பெறவும் இந்நன்னாள் நமக்கு ஊக்கமளிக்கிறது.

இத்திருநாள், நம்முடைய மாநிலத்திற்கு மட்டுமல்லாது, ஒட்டுமொத்த தேசத்திற்கும் மகிழ்ச்சியையும் வளத்தையும் நல்லிணக்கத்தையும் அமைதியையும் நல்ல ஆரோக்கியத்தையும் வாரி வழங்கட்டும். நன்மை மற்றும் ஒளியின் வலிமை என்னென்றும் தழைத்தோங்கட்டும்.

பன்வாரிலால் புரோகித்
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர்

---

ஆளுநர் மாளிகை, சென்னை- 22 ஒம்/-
நாள்: 13.11.2020 கூடுதல் இயக்குநர் (ம தொ)

**Press Release No.105** **Date:13.11.2020**

# HON'BLE GOVERNOR OF TAMIL NADU, THIRU. BANWARILAL PUROHIT'S MESSAGE ON DEEPAVALI

Deepavali signifies the triumph of hope over despair, good over evil and light over darkness. On this auspicious and joyous occasion, I extend my warm greetings and good wishes to the people of Tamil Nadu.

Deepavali is heralded as one of the most significant festivals of India and is celebrated across the country and throughout the world. Deepavali, the 'festival of lights' is the celebration of the perpetual power of the good and its capability to conquer all evil. It tells us that truth and virtue alone triumph in the end. It inspires us to move from darkness towards light, from ignorance towards wisdom and from melancholy towards bliss.

May this festival bring happiness, prosperity, harmony, peace and good health in our State and the whole Nation. May the power of good and brightness always prevail.

**BANWARILAL PUROHIT**
**GOVERNOR OF TAMIL NADU**

Raj Bhavan, Chennai -22 Sd/-
Date:13.11.2020 Addl. Director (PR)